


# ST HUGH

# புனித ஹியூக் (1053-1132)

குழந்தைப் பருவத்தில் இருந்தே இறைவனது ஆசீர் இவருடன் இருந்தது. இவர் குருவாக விரும்பினார். வலான்ஸ் நகர் மேற்றிராசனக் கோவிலில் இவருக்கு ஒரு வேலை கொடுக்கப்பட்டது. இவர் தமது புண்ணியங்களினால் அந்த ஆலயத்திற்கு ஓர் ஆபரணம் போல் விளங்கினார். கர்தினால் இவரைத் தம்மிடம் அழைத்து வைத்துக் கொண்டு முக்கியமான பல வேலைகளுக்கு இவரை பயன்படுத்தியதோடு ஆயராக நியமித்தார். அவரது மறைமாவட்டம் மிகப் பரிதாப நிலையில் இருந்தது. அதைச் சீர்திருத்த முழுமூச்சுடன் உழைத்தார். இவரது ஆர்வத்தாலும், உழைப்பாலும் மறைமாவட்டம் சீர்திருந்தியது. இரு ஆண்டுகளுக்குப் பின் இவர் தம் பதவியை விட்டு விலகினார். என்றாலும் பாப்பானவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பதவியைத் திரும்ப ஏற்றுக் கொண்டார். இவரது காலத்தில் புனித புருனோ தம் ஆறு தோழர்களுடன் உலகத்தைத் துறக்க தீர்மானித்து இவரிடம் வந்தனர். இவர் அவர்களுக்கு நல்லதோர் இடத்தைக் காண்பித்து அங்கு வசிக்கும்படி கூறினார். உலகப் பிரசித்தி பெற்ற சந்நியாச சபை ஒன்று அங்கு ஆரம்பமாயிற்று. 40 வருட காலம் கடின வியாதியால் கஷ்டப்பட்டு தமது 80-ஆம் வயதில் இறந்தார்.

<u>சிந்தனை:</u>

கிறிஸ்துவின் பிரதிநிதியான பாப்பானவருக்கு கீழ்ப்படிவது நமது கடமை.

<u>செபம்:</u>

ஆண்டவரே, அனைத்துலக ஆயர்களும், குருக்களும் பாப்பானவருக்கு கீழ்ப்படிந்து நடப்பார்களாக.


SAINTS FUN FACTS
by John Sheppard
St. Hugh was educated in a convent after his mother's death and was eventually ordained a Carthusian.
He had a reputaion for holiness and sanctity all over England and was one of the leaders in denouncing the persecution of the Jews that swept over England.
SHEPPARD
(C) 2011 John Sheppard - Distributed by Catholic Online - www.catholic.org